1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல காய்கறியும், பசுமையான காய்கறியும் சத்துணவுக் கூடங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக கூட்டுறவுச் சங்கம் மூலமாக காய்கறிகள் வாங்க வேண்டுமென்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

சினிமா தியேட்டர் டிக்கெட்டுகள்.

78—(*வினா எண். 14008) திரு. த. பழனி : மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சினிமா தியேட்டர்களில் கொடுக்கும் டிக்கெட்டுகளை துறையே அச்சிட்டுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் கொடுக்கப்படும் நுழைவுச் சீட்டுகளை துறையே அச்சிட்டுக் கொடுக்கும் செயற் குறிப்பு எதுவும் அரசிடமில்லை.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் கொடுக்கப்படும் நுழைவுச் சீட்டுகளை துறையே அச்சிட்டுக் கொடுக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இருந்தாலும் திரையரங்குகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஒவ்வொரு திரையரங்கிலும் 5 ரூபாய், 10 ரூபாய் என்று ஒவ்வொரு டிக்கெட்டுக்கும் மொத்தமாக பெற்றுக்கொண்டு, அங்கே போகிறவர்கள் எங்கே வேண்டுமானாலும் போய் அமரலாம் என்கிற முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய முறை நகர்ப்புறங்களில் அதிக அளவில் இருக்கிறது. அதைத் தடுக்கின்ற திட்டங்கள் அரசிடம் உண்டா? அப்படியானால் இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மொத்தம் 2,249 திரையரங்குகள் இருக்கின்றன. இவைகளில் குறிப்பாக நாள் ஒன்றுக்கு 3 காட்சிகள் என்று வைத்துக் கொண்டாலும் கூட, ஒரு காட்சிக்கு 500 பேர் வந்து படம் பார்க்கிறார்கள் என்று கணக்கிட்டால் தினசரி 33,73,200 டிக்கெட்டுகளை அச்சடித்து தமிழகத்திலே, சென்னையிலேயிருந்து கன்னியாகுமரி வரையுள்ள திரை அரங்குகளுக்கு கொடுக்க வேண்டும். இது அரசினால் சாத்தியமான காரியமல்ல. அதோடு மாத்திரமல்லாமல் அரசுக்கு ஏராளமாக செலவு ஏற்படும். தவிரவும் அரசுக்கு இது பயன் தராது என்கிற காரணத்தால் தான் அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்று குறிப்பிட்டேன். அதோடு மட்டுமல்லாமல் இன்றைய தினம் சிறப்பு நகராட்சி, மாநகராட்சி போன்ற இடங்களைத் தவிர்த்து மற்ற இடங்களில் எல்லாம் இணக்க வரி முறையை அமுல்படுத்தி வருகிறோம். அங்கே போலி டிக்கெட்

கள் நுழைய வழியில்லை. அப்படியும் எங்கேயாவது இது சம்பந் மாக புகார் வருகிறதென்றால் உடனடியாக அதிகாரிகள் சோதனையிட்டு, குற்றங்களைத் தடுத்து நடவடிக்கை மே கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

வணிக வரித் துறைக்கு ஆலோசனை குழுக்கள் :

*79—(*வினா எண் 14022)—* **திரு. பி. என். இராமச்சந்திரன்:** மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக வரித்துறைக்கு ஆலோசனை வழங்கிட வட்ட அளவில் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய ஆலோசனை குழுக்கள் நியமிக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை சொல்லும் போது 'இல்லை' என்று சொன்னார்கள், சில தொழில்கள் சில பகுதிகளில் மட்டும் நடைபெறுகின்றன. அப்படி இருக்கின்ற நேரத்தில் எங்கோ மாநில அளவில் ஓரிடத்தில் மட்டும் ஆலோசனைக்குழு இருந்து ஆலோசனை வழங்குவதால் அதனால் பயனில்லை. ஆங்காங்கே வட்ட அளவில் ஆலோசனைக் குழுக்கள் இருந்தால் பொது மக்களிடமிருந்து, அரசியல் வாதிகளிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று அதன் அடிப்படையில் வட்ட அளவில் சில சலுகைகளை, வசதிகளை பெற ஏதுவாக இருக்கும். அதற்கு ஆவன செய்ய வேண்டும். மாநில அளவில் இருக்கின்ற ஆலோசனைக் குழு ஆண்டு ஒன்றுக்கு எத்தனை முறை கூடுகின்றது ? இதுவரையில் என்ன பயன் தரும் ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20).

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவகளே, இன்றைய தினம் தமிழகத்திலே புதிதாக பிரிக்கப்பட்ட சிதம்பரனார் மாவட்டம் தவிர மற்ற 19 மாவட்டங்களில் மாவட்ட அளவிலே உள்ள வணிகர்கள் குழு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் கூடி விவாதிக்கின்றார்கள். அங்கே கூடி விவாதிக்கின்ற பொருட்களின் மீது ஆட்சித் தலைவர்களே ஒரு முடிவெடுத்து வருகிறார்கள். அவர்களாலே முடியாத காரியங்கள் அரசுக்கு அனுப்பப்படுகின்றன. **அரசு**